**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),**

**பசுமலை, மதுரை – 625 004.**

26.04.2022 செவ்வாய்க்கிழமையன்று 77-ஆவது வாசகர் வட்டம், நேரம் காலை 11:50 – 01:30 மணி வரை புத்தக மதிப்புரை நடைபெற்றது. புத்தக மதிப்புரை செய்த மாணவர்கள்

- சி.காவியா, II B.A. Tamil - "கம்பராமாயணம் - உருக்காட்டுப் படலம், சூளாமணிப் படலம்"
- மு.முத்துஸ்வேதா, II B.A. Tamil - "புதிய கண்ணோட்டத்தில் - கை விலங்கு (நாவல்)"


## ஐந்திணைத் தமிழ் மன்றம் நடத்தும் 77-வது வாசகர் வட்டம்




செ. காவேரிபாலன், இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு மாணவன் வரவேற்புரை நிகழ்த்துதல்.




சி. காவியா, இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி கம்பராமாயணம் – உருக்காட்டுப்படலம் மற்றும் சூளாமணிப் படலம் குறித்து எடுத்துரைத்தல்.




மு. முத்துஸ்வேதா, இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி புதிய கண்ணோட்டத்தில் கை விலங்கு (நாவல்) குறித்து எடுத்துரைத்தல்.




ஐந்திணைத் தமிழ் மன்றம் நடத்தும் வாசகர் வட்டம் நிகழ்வில் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

புத்தக மதிப்புரை செய்த மாணவிகளுக்கு பரிசு வழங்குதல்






ஐந்திணைத் தமிழ் மன்றம் நடத்தும் உலக புத்தக தின விழா சிறப்புச் சொற்பொழிவு 20.04.2022 புதன்கிழமையன்று பிற்பகல் 12.01 முதல் 01.30. மணி வரை நடைபெற்றது. இவ்விழாவில் கவிஞர் பா. திலகபாமா, நிர்வாக இயக்குநர், மதி ஒருங்கிணைந்த சுகாதார மையம், சிவகாசி அவர்கள் ‘வாசிப்பு திறக்கும் மூன்றாவது கண்’ எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.






ஐந்திணைத் தமிழ் மன்றம் நடத்தும் உலக மரபுத் தின விழா சிறப்புச் சொற்பொழிவு 18.04.2022 திங்கள்கிழமையன்று பிற்பகல் 12.01 முதல் 01.30. மணி வரை நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் ரா. அந்தோணி பால் ஞானசேகர், இணைப் பேராசிரியர் (ஓய்வு), வரலாற்றுத் துறைத் தலைவர், அருளானந்தர் கல்லூரி, மதுரை அவர்கள் ‘தலைமுறை கண்ட தமிழர் பாரம்பரியம்’ எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.



மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு தொல்காப்பியர் மன்றம் சார்பாக 29.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று மூர்த்தி நாயுடு ஆண்டாளம்மாள் அரங்கில் ஆய்வரங்கம் நடைபெற்றது. இதில் ப. ஹரிபிரபா முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு 'ஆடு கோட்பாட்டுச் சேரலாதனின் சிறப்புகள்' குறித்து ஆய்வுரை வழங்கினார். முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி 'மெய்ப்பாடும் அதன் வகைகளும்' எனும் தலைப்பில் ஆய்வுரை வழங்கினார்.




**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி ( தன்னாட்சி)**
**தேசிய தரமதிப்பீட்டுக் குழுவினரால் 'A' தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது**
**பசுமலை, மதுரை – 625 004.**
**தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு நடத்தும்**
**தொல்காப்பிய மன்றம்**

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறையின் தொல்காப்பிய மன்றம் சார்பாக 29.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று மூர்த்தி நாயுடு ஆண்டாளம்மாள் அரங்கில் ஆய்வரங்கம் நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தி.பரிமளா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆய்வரங்கின் அமரவுத் தலைவராக முனைவர் இரா.சிங்கராசா அவர்கள் கலந்து கொண்டு ஆய்வாளர்களை நெறிப்படுத்தினார். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் சிறப்புகள் குறித்து முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி ப. ஹரிபிரபா அவர்கள் ஆய்வுரை நிகழ்த்தினார். தண்டாரணியம் பகுதியில் பிடிபட்ட்ட வருடை ஆடுகளைத் தன் தொண்டி நகருக்கு கொண்டு வந்து பார்ப்பணர்களுக்கு வழங்கச் செய்தான். இதனால் இவன்

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற காரணத்தை அகச் சான்றோடு எடுத்துரைத்தார். போர் மறவர்களுக்கு கலசம் போல் விளங்கியதால் வானவராயன் என்று அழைக்கப்பட்டான். இவனைப் பாடிய காக்கைப் பாடினியார் என்ற பெண் புலவர் நூறரயிரம் பொன்னும் பணமும் கொடுத்தான். மேலும் அவரை தன் அவைக்களப் புலவராகவும் அமர்த்திக் கொண்டான் . இது போன்ற ஆராய்ச்சிக் கருத்துக்களை எடுத்துரைத்தார். முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி க. கற்பகவள்ளி மெய்ப்பாடும் அதன் வகைகளும் என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார். மனித உள்ளத்தின் உணர்ச்சிகளை உடலில் வெளிப்படுமாறு செய்வது மெய்ப்பாடு எனப்படும் என்றும், தொல்காப்பியம் எடுத்துரைக்கும் மெய்ப்பாடுகள் எட்டு ஆகும். அவை தோன்றும் இடங்கள் என்று ஒவ்வொன்றும் நான்கு வகைகளாக பகுத்துக் காட்டப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி 32 மெய்ப்பாடுகள் வேறுபடுத்திக் காட்டியும் தன்னுடைய ஆய்வுரையை தொல்காப்பியர் வழிநின்று எடுத்துரைத்தார். மெய்ப்பாடுகள் தோன்றும் இடங்களை சுவை என்றும் மெய்ப்பாடுகளை அவத்தை என்றும் உரையாசிரியர்கள் கூறுவதாக சான்றுகளுடன் எடுத்துரைத்தார். முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி அ. மணிநிவேதிதா என்பவர் இறைவனால் ஈர்க்கப்பட்ட மாணிக்கவாசகர் என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார். பக்திச் சுவையும் மனதை உருக்கும் தன்மையும் கொண்ட பாடல்களைப் பாடியவர் மாணிக்கவாசகர். இமைப் பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க என்ற அடிகளால் தமிழின் அருட்திறத்தையும், மாணிக்கவாசகருக்கும் இறைவனுக்குமான நெருக்கத்தையும் உணரலாம். இவர் ஞானநெறியைப் பின்பற்றி இறைவனை வழிபட்டவர். இவருக்காக சிவபெருமானே நரியைப் குதிரையாக்கி கொண்டுவரும்படியும், மண்சுமந்து அடிபடுவதும் மாணிக்கவாசகர் இறைவனால் ஈர்க்கப்பட்டவர் என்பதற்குச் சான்றாகும் என்று விளக்கப்பட்டது. நிகழ்வின் இறுதியாக முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவன் கி. சிவகுரு நன்றி கூறினார். தமிழ்த்துறை மாணவர்கள் 158 பேர் பங்கு பெற்றனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளைத் தொல்காப்பிய மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. சிங்கராசா மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர் நா. இரஞ்சித்குமார் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

அருட்திறத்தையும், மாணிக்கவாசகருக்கும் இறைவனுக்குமான நெருக்கத்தையும் உணரலாம். இவர் ஞானநெறியைப் பின்பற்றி இறைவனை வழிபட்டவர். இவருக்காக சிவபெருமானே நரியைப் குதிரையாக்கி கொண்டுவரும்படியும், மண்சுமந்து அடிபடுவதும் மாணிக்கவாசகர் இறைவனால் ஈர்க்கப்பட்டவர் என்பதற்குச் சான்றாகும் என்று விளக்கப்பட்டது. நிகழ்வின் இறுதியாக முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவன் கி. சிவகுரு நன்றி கூறினார். தமிழ்த்துறை மாணவர்கள் 158 பேர் பங்கு பெற்றனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளைத் தொல்காப்பிய மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. சிங்கராசா மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர் நா. இரஞ்சித்குமார் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

ஐந்திணைத் தமிழ் மன்றம் நடத்தும் ‘இளவேனில் 22’ 31.03.2022 வியாழக்கிழமை அன்று பல்திறன் போட்டிகள் நடைபெற்றது. இதில் பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, பாட்டுப்போட்டி, ரங்கோலி, மௌனமொழி, நாட்டுப்புறக் குழு நடனம் ஆகிய போட்டிகள் நடைபெற்றது. இதில் ஒவ்வொரு துறையிலிருந்தும் 16 மாணவர்கள் இடம் பெற்றனர். தமிழ்த்தறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பாக நடத்தினர்.





22.03.2022 புதன்கிழமையன்று 76-ஆவது வாசகர் வட்டம், நேரம் காலை 11:50 – 01:30 மணி வரை புத்தக மதிப்புரை நடைபெற்றது. புத்தக மதிப்புரை செய்த மாணவர்கள்

- சே.சந்திரலேகா, I MSW - "வேட்கை" (சிறுகதை) - சூரியகாந்தன்
- மா.கீர்த்தனா, I BSW - "மௌனத்தின் சப்தங்கள்" (கவிதை) – கவிஞர் வைரமுத்து
- க.சோலைபிரபா, I BSW - "அவர்கள் வருகிறார்கள்" (கவிதை) –மு.மேத்தா



ஐந்திணைத் தமிழ் மன்றம் நடத்தும் காரைக்கால் அம்மையார் விழா சிறப்புச் சொற்பொழிவு 21.03.2022 திங்கள்கிழமையன்று நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் மு. கற்பகம், உதவிப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை – 9 அவர்கள் “அம்மை காட்டும் அய்யனின் லீலைகள்” என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.









மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு சார்பாக இளங்கலை மற்றும் முதுகலை பயிலும் மாணவர்களை கோயிற்கலை பாடம் தொடர்பாக ஒருநாள் கல்விச் சுற்றுலாவாக 19.03.2022 சனிக்கிழமை அன்று குடைவரைக் கோவிலான கழுகுமலை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் உள்ள குடைவரைக் கோவில்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டது.







மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு சார்பாக நூல் வெளியீட்டு விழா 10.03.2022 வியாழக்கிழமை அன்று காலை 9 மணியளவில் தொடங்கி நடைபெற்றது. இவ்விழாவில் செங்காந்தள் போர், உலகமயமாதல் சூழ்நிலையில் தமிழ் மொழி, சங்க இலக்கியத்தில் போரும் அமைதியும் என்னும் தலைப்பில் மூன்று நூல்களை வெளியிட திரு. மூ. விஜயராகவன் செயலாளர், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை அவர்கள் வெளியிட்டார்கள். இந்நூலைப் பெற்று தமிழியல் அறிஞர் முனைவர் இ.கி. இராமசாமி, மேனாள் தலைவர், தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி, மதுரை அவர்கள் கருத்துரை வழங்கினார்.






ஐந்திணைத் தமிழ் மன்றம் நடத்தும் உ.வே.சா. பிறந்தநாள் விழா சிறப்புச் சொற்பொழிவு 28.02.2022 திங்கள்கிழமையன்று நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் ம. கண்ணன் ‘இப்படியும் ஒரு மாணவர்’ எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.









ஐந்திணைத் தமிழ் மன்றம் நடத்தும் பாரதியாரின் 140-ஆவது பிறந்தநாள் விழாச் சிறப்புச் சொற்பொழிவு 15.12.2021 புதன்கிழமை அன்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக முனைவர் ச.குருஞானாம்பிகா, உதவிப் பேராசிரியர், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அவர்கள், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அவர்கள், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அவர்கள் ‘‘பெரிதினும் பெரிது கேள்’’ எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

